Rapid Transit System for Madras

* *Q. No.* 429—THIRU K. ABDUL LATHEEF : Will the Hon. the Minister for Labour be pleased to state :—

(a) whether the Tamil Nadu Government has impressed on the Central team of Officers on the 4th May 1978 about the need to take up the Rapid Transit System of Madras for execution, and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) & (ஆ): மத்திய வீட்டு வசதித் துறையின் செயலாளரின் தலைமையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் செயற்படுத்தப் படும் பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம் பற்றி, 1978 ஆம் ஆண்டு மே திங்கள் 4-ந் தேதி தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தின்போது, சென்னை விரைவுப் போக்குவரத்துத் திட்டம் இன்னும் மத்திய திட்டக் குழுவினால் அனுமதிக்கப்படவில்லை என்று சுட்டிக் காட்டப் பட்டது. இந்த விஷயம் திட்டக் குழுவின் உயர்மட்ட அதிகாரி களால் ஆராயப்படுகிறதென்றும், இந்தத் திட்டம் பற்றி மத்திய திட்டக் குழுவிடம் தானே நேரடியாக தொடர்பு கொள்வதாகவும் கூட்டத் தலைவர் கூறினார்.

[முற்பகல் 9-40]

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, மத்திய அலுவலர் குழுவிடம் சிபார்சு செய்த அம்சங்களில் எவை எவை ஏற்றுக் கொள்ளப்பட்டன? எந்தெந்த அம்சங்கள் நிராகரிக்கப்பட்டன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஒரே திட்டம் அது. . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.

(பதில் இல்லை).

தூத்துக்குடி கடற்கரை சாலையில் கட்டிடங்கள்.

* வினா எண். 430—திரு. ந. தனசேகரன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தூத்துக்குடி புதிய துறைமுகம் செல்லும் கடற்கரைச் சாலையில் கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரி தனியார்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளனவா ?